தமிழர்களின் இதயத் துடிப்பு
குமுதம்
நம்பர் 1 தமிழ் வார இதழ்
2.1.2008
ரூ.9 (தமிழ்நாடு, புதுச்சேரி) ரூ.10 (பிற மாநிலங்களில்)


ஸ்ரீனிவாசன்

www.kumudam.com
குமுதம்
நம்பர் 1 தமிழ் வார இதழ்

# சங்கீத பஜார்



“பட்டம் கட்ட ஏத்தவன்டி நாலு பேரில் மூத்தவன்டி” என்று மகாராஜபுரம் ஸ்ரீனிவாசன் குரலெடுத்து இந்தோளத்தைப் பாடியபோது, அயோத்தியா மண்டபத்தில் உள்ள அத்தனை தலைகளும் சொல்லி வைத்தாற் போல அசைந்தன. (மு.க.அழகிரி ஆதரவாளர்கள் ரசிக்கும் வரிகள்) அருணாசல கவிராயரின் பிரமாத மான ராமநாடகப் பாடல்.

அப்புறம் சந்தானத்தின் வழியில் ஜிலுஜிலுப்பாக வந்தது கரகரப்ரியா. பிர்க்காக்கள் சீறிப் பாய்ந்தன. அந்த மகாராஜபுரம் வழிக்கே ஒரு தனிசுகம் உண்டு. இன்ஸ்டன்ட் காபி குடித்தே மரத்துப்போன நாக்கிற்கு ஃபில்டர் காபி குடிக்கும்போது ஏற்படும் குஷி அது. ‘திருசெந்தில் ஆண்டவனை’ ரொம்ப சம்பிரதாயமாகப் பாடினார். தங்கள் தாத்தா வழி சொத்தான மோகனத்தை எடுத்துக்கொண்டபோது, ஒட்டுமொத்த மண்டபமும் ‘உச்’ கொட்டியது. இறுதியில் ‘ரகுவீர ரணதீர, கோவிந்தா நின்னே நாமமும், நாளை வரும் நம்பலாமா, என்று அப்பாவின் லட்டுலட்டான பாட்டுக்கள் அணிவகுத்தபோது, மேடையில் ராஜகம்பீரமான சந்தானம் அரூபமாகத் தெரிய... இதயம் கனமானது.

‘யார் என்ன சொன்னாலும் அஞ்சாதே மனமே’ என்று மணிரங்குவில் அழகாக முடித்தார் ஸ்ரீனிவாசன். அவருக்கு ஒரு வார்த்தை, யார் என்ன சொன்னாலும், அப்பா பாணியை விடாதீர்கள். அதேசமயம் ஸ்வரம் போடும்போது தந்தைபோல இன்னும் விவகாரத்துடன் விலாசுங்கள்!

மாயவரத்தான்
படங்கள் : சித்ரம் மத்தியாஸ்